Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**STC.No. 31/2024**

**Deposition of PW.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சௌந்தரராஜன் | ஜாதி | : | |
| த/பெ | : | கனகராஜ் | தொழில் | : | இன்சூரன்ஸ் ஏஜென்ட் |
| கிராமம் | : | அம்பாத்துரை | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 52/2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 20.11.2024.

(Complainant present, Accused absent U/s. 317 CrPC petition filed and allowed )

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் புகார்தாரர் ஆவேன். புகார்தாரர் தரப்பு 1வது சாட்சியாவேன். எனது முதல் விசாரணை சாட்சியத்தை பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொன்னது தான். அதில் உள்ள கையொப்பங்கள் என்னுடையது தான். மேலும் 10.08.2023 தேதியில் சின்னாளபட்டி இந்தியன் வங்கி கிளையின் 236451 என்ற எண் கொண்ட காசோலையை புகார்தாரர் ஆகிய எனக்கு எதிரி வழங்கியது அசல் ம.சா.ஆ 1 ஆகவும், மேற்கண்ட காசோலையை 11.08.2023 மற்றும் 11.09.2023 ஆகிய தேதிகளில் அன்று அம்பாத்துரை பாரத ஸ்டேட் வங்கி கிளையில் வசூலுக்கு செலுத்தியதற்கான ரசீதுகள்( 2 எண்ணிக்கை) அசல் ம.சா.ஆ 2 ஆகவும், 14.08.2023 மற்றும் 12.09.2023 தேதிகளில் மேற்கண்ட காசோலை போதிய பணம் இல்லை என திருப்பப்பட்டதற்கான குறிப்பாணைகள் ( 2 எண்ணிக்கை) அசல் ம.சா.ஆ 3 ஆகவும், 11.10.2023 அன்று எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் ம.சா.ஆ 4 ஆகவும், 12.10.2023 அன்று மேற்கண்ட வழக்கறிஞர் அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை அசல் ம.சா.ஆ 5 ஆகவும், எனது ஆதார் அட்டை நகல் ம.சா.ஆ 6 ஆகவும், 27.11.2023 அன்று எதிரி அனுப்பிய வழக்கறிஞர் பதில் அறிவிப்பு நகல் ம.சா.ஆ 7 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது. எனவே எதிரிக்கு தக்க தண்டனை வழங்கி மேற்கண்ட காசோலை தொகையை எதிரியிடம் இருந்து இழப்பீடாக பெற்றுத்தந்து தீர்ப்பளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை -** இல்லை

**Sd/.P.Jaisankar**
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.